முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved] 

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministr

**கல்வி அமைச்சு**

**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை - 2024

**General Certificate of Education (Adv. Level) Examination - 2024**

தமிழ் **I**
**Tamil I**

**72 T I**

*மூன்று மணித்தியாலம்*
***Three hours***

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- பகுதி I இல் உள்ள **இரு** வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக**

அ) படுமழை பொழிந்த பயம்மிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்கக்
குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி
செந்நில மருங்கின் நுண் அயிர் வரிப்ப
வெஞ்சின அரவின் பை அணந் தன்ன
தண் கமழ் கோடல் தாது பிணி அவிழத்
திரிமருப்பு இரலை தெள்ளறல் பருகிக்
காமர் துணையொடு ஏமுற வதியக்
காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி
ஓடு பரி மெலியாக் கொய்சுவல் புரவித்
தாள் தாழ் தார்மணி தயங்குபு இயம்ப
ஊர்மதி வலவ தேரே சீர்மிகுபு
நம்வயிற் புரிந்த கொள்கை
அம்மா அரிவையைத் துன்னுகம் விரைந்தே.

I. இச்செய்யுள் யாரால், யாரை நோக்கி, எவ்விடயத்தை வலியுறுத்துகிறது?

II. இச்செய்யுளில் வெளிப்படும் அகத்திணை மரபுகளைக் குறிப்பிடுக.

III. இச்செய்யுளில் தலைவனின் காதல் உணர்வு வெளிப்படுமாற்றினை விளக்குக. (4+4+4 = 12 புள்ளிகள்)

**ஆ)** மருங்கடை தென்கரை வந்து தோன்றினா
னொருங்கடை நெடும்படை ஒல்லெ னார்ப்பினோ
டருங்கடை யுகந்தனி லசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே.

I. இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினைத் தெளிவுபடுத்துக?
II. இச்செய்யுளில் இடம்பெறும் உவமையினை எடுத்துக்காட்டி விளக்குக.
III. குகனது படைச்சிறப்புகள் இச்செய்யுளில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன?

(4+4+4 = 12 புள்ளிகள்)

2. '(அ)' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

**அல்லது**

'(ஆ)' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம்; வெல்லுவ மென்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடைய வள் சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்;
இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்,
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?

திறமையா லிங்கு மேனிலை சேர்வோம்;
தீய பண்டை யிகழ்ச்சிகள் தேய்ப்போம்;
குறைவி லாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனில வரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதிற் சேர்ந்திங் குழைப்போம்;
அறவி ழுந்தது பண்டை வழக்கம்;
ஆணுக் குப்பெண் விலங்கெனு ம∴தே.

விடியு நல்லொளி காணுதி நின்றே,
மேவு நாக ரிகம்புதி தொன்றே
கொடியர் நம்மை யடிமைக ளென்றே
கொண்டு தாம்முத லென்றன ரன்றே.
அடியொ டந்த வழக்கத்தைக் கொன்றே
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்வீர், நந் தேசத்து வீரக்
காரி கைக்கணத் தீர், துணி வுற்றே.

I. பெண் விடுதலை பற்றிய உணர்ச்சி மொழிகள் யாவை?
II. கவிஞரின் காலத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்த இடத்தினை மதிப்பிடுக.
III. பெண்கள் அடைய விரும்புபவை யாவை?
IV. இக்கவிதையில் வாசகர் கவனத்தை ஈர்க்க கவிஞர் கையாண்டுள்ள உத்திகளைக் குறிப்பிடுக.

(4+4+4+4 = 16 புள்ளிகள்)

(ஆ)

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் நான் என் பீங்கானைக் கழுவி எடுத்துப்போய் என் சோத்தை வாங்கிக் கொள்ளவேண்டும். அதுபோல் எல்லோரும் தேனீர் குடித்து முடிந்ததும், நான் எனது கோப்பையைக் கழுவி எடுத்துச் செல்லவேண்டும். சிறைக்கைதிகளும் இப்படித்தான் என்று யாரோ கதைத்தார்கள். நானும் இவ்வீட்டில் ஒரு சிறைக்கைதியா? தேயிலைக்குத் தண்ணீர் வைப்பது நான். அரிசி கழுவுவது, மீன் வெட்டுவது, மரக்கறிவகை அரிவது எல்லாம் நான். உண்ணும்போதும் குடிக்கும்போதும் மட்டும் நான் ஒரு இழிந்த சாதியாக எப்படி மாறுகிறேன்.

முஸ்லிம்களெல்லாம் சமமானவர்கள், சகோதார்கள் என்று சொல்கிறார்கள். நான் மட்டும் இந்தச் சகோதரர்களில் சேரவில்லையா? என் உம்மா, ஐந்து ‘வக்து’ ம் ஒழுங்காகத் தொழாவிட்டாலும் நோன்பு முப்பதும் பிடிப்பா, ‘தறாவீஹ்’ தொழப்போவா, ஹறாம் ஹலாலுக்கு பயந்து நடப்பா. அவ வயத்துல பிறந்து ஸல்மா என்று பெயரும் வைத்துக்கொண்ட நான் வேலைக்காரியான காரணத்தினால் தானே இழிந்தவளானேன்! என் ஆசையின்படி உடுக்க முடியவில்லை! என் எண்ணத்தின்படி நடக்கமுடியவில்லை!

அடுத்த தெருவில் ஒரு நெசவு நிலையம் இருக்கிறது. குமர்ப்பிள்ளைகளெல்லாம் அங்குபோய் தொழில் பழகுதுகள். அதன் விருப்பம்போல உடுத்திக்கொண்டு சந்தோஷமாகக் கதைத்துக் கொண்டு போகுதுகள். எனக்கு என்ன தொழில் தெரியும்? இந்த வீட்டுக்கு வந்து என்னத்தப் படிச்சுக் கொண்டேன்! ஸல்மாவின் சிந்தனை எதிர்நீச்சல் அடிக்கத் தொடங்கிற்று. அதனைத் திருப்பி எடுப்பது இனி இயலாத காரியம்.

மறுநாள் ஸல்மா அந்த வீட்டில் இருந்து விலகினாள். போடியார் பெண்சாதி சந்தோஷமாகப் பதினைந்து ரூபாய் சம்பளத்தையும் கொடுத்தா. போடியார் அன்பளிப்பாக நூறு ரூபா கொடுத்தனுப்பினார். ஐந்து வருடங்களுக்குப் பின்னர் தன் தாய் வீட்டில் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு மனநிறைவான ஒரு வாழ்வு வாழ ஸல்மா மிக வேகமாகத் தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

பாய் களிசான், கௌன், மார்பகத்தில தாவணி இத்தனையும் அணிந்துகொண்டு, எடுப்பான அழகுத் தோற்றத்தோடு, கையில் குறிப்புக் கொப்பியுடன் நெசவு நிலையம் நோக்கி நடந்து செல்லும் புதுப்பிள்ளை வேறு யாருமில்லை! அந்தப் பதின்மூன்று வயது வேலைக்காரி ஸல்மாதான். அவள் இப்பொழுது நெசவு பழகுகிறாள். அவளது கம்பீரமான நடை, களங்கமற்ற நேர்பார்வை என்பன அவளுடைய எதிர்கால வாழ்வின் வெற்றிக்கு நம்பிக்கையான ஆதாரங்களாக அமைந்தன.

I. வேலைக்காரச் சிறுமியின் மன அவலங்கள் வெளிப்படுமாற்றை எடுத்துக்காட்டுக.
II. இஸ்லாமிய பண்பாட்டம்சங்களாக வெளிப்படுவன எவை?
III. ஸல்மாவின் எதிர்காலம் பற்றிய கதை சொல்லியின் மனப்பாங்கை தெளிவுபடுத்துக.
IV. இவ் உரைப்பகுதியின் மொழிநடை பற்றி விளக்குக

(4+4+4+4 = 16 புள்ளிகள்)

## பகுதி II

2. திருக்குறள், ‘தெரிந்து வினையாடல்’ என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) ஆளுதற்குரியானது இலக்கணம்
ஆ) வினையிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியவரும் வினையினது இயல்பும்
இ) ஆளுதற்குரியானை ஆளும் திறம், ஆளும் வழிவகை

(6+4+10 = 20 புள்ளிகள்)

4. கம்பராமாயணம் குகப்படலத்தில் எதிர்க்கரையில் நின்றிருந்த குகனைப்பற்றி சுமந்திரன் பரதனுக்கு கூறுவது முதல் பரதன் வந்த செய்தியை வினவுவது வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) சுமந்திரனின் சிறப்புகள்
ஆ) பரதனது சிறப்பும் தோற்றமும்
இ) இராமனிடத்து குகன் கொண்ட பக்தி
ஈ) இப்பகுதியில் கையாளப்பட்ட அணிகள் (5+5+5+5 = 20 புள்ளிகள்)

5. க.நவம் எழுதிய ‘கூத்து’ என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விபரிக்குக.

அ) சரவணமுத்து, நாகாத்தை போன்ற பாத்திரங்களின் குணாம்சங்கள்
ஆ) அக்கால கூத்தாட்ட நடைமுறைகள்
இ) சரவணமுத்து நாகாத்தை மீது கொண்ட காதல் அவளது வாழ்வில் ஏற்படுத்திய செல்வாக்கு
ஈ) ‘தன்னை மறத்தல்’ என்ற செயலின் விளைவு (5+5+5+5 = 20 புள்ளிகள்)

6. ‘தமிழர் நாகரிகத்தில் கிராமிய வாழ்க்கை’ என்ற புதுமைப்பித்தனின் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) நாகரிக வளர்ச்சியில் கிராமங்கள் பெறும் முக்கியத்துவம்
ஆ) பேராய்ச்சி கோயில் பற்றிய சித்திரிப்பு
இ) கிராம நாகரிகத்தில் விவசாயம் பெறுகின்ற செல்வாக்கு
ஈ) விருந்தோம்பலும் சுவையும் (5+5+5+5 = 20 புள்ளிகள்)

7. ‘ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது’ என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) ஆலங்கேணி கிராம மக்களின் கடின உழைப்பு
ஆ) அக்கிராம மக்களின் கலாசாரம்
இ) சௌந்தரம் என்ற பாத்திரத்தின் வருணனை
ஈ) காத்திருப்பின் முக்கியத்துவம் (5+5+5+5 = 20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) ‘அமலனாதிபிரான்’ பதிகத்தில், பெருமாளின் தோற்றப்பொலிவு
ஆ) ‘பாரதியார்’ என்ற கவிதையினூடாக புலவர் மு.நல்லதம்பி பாரதியின் பெருமைகளாக வெளிப்படுத்தியுள்ளவை
இ) இ.முருகையனின் ‘இரு துயரங்கள்’ நாடகத்தில், பாத்திரங்களின் முரண்பாடுகளுக்கான காரணங்கள்
ஈ) பாரதிதாசனின் ‘உதயசூரியன்’ கவிதையில், சூரியனின் வருகையால் ஏற்பட்ட மாற்றங்கள்
உ) ‘தியாகம்’ சிறுகதையில், செட்டியாரின் தியாக மனப்பாங்கு (10+10 = 20 புள்ளிகள்)